**களுத்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 யூலை 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்தெம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து களுத்துறை நகர சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ஆதன வரி வருமானம் ரூபா 1,454,967 குறைவாகவும் விநோத வரி வருமானம் ரூபா 1,426,362 தொகை அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | ஆதன வரி வருமானத்தில் வழங்கப்பட்ட கழிவு மேலதிக செலவினம் தனியாக கணக்கு வைக்கப்படாதிருந்தது டன் விநோத வரி வருமானத்தில் ஏற்பட்ட தவறும் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டமையால் சரி செய்வதற்கான தேவை ஏற்படவில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதனச் செலவினம் ரூபா 444,500 தொகை குறைவாகவும் இயந்திரங்களும் உபகரணங்களும் ரூபா 204,866 தொகை அதிகரித்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் காகிதாதிகள் மற்றும் ஆயர்வேத மருந்து இருப்பு மீதி என்பன நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய மக்கள் வங்கியின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 783,064 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டதுடன் தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 378,097 தொகை நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரிசெய்யப்படும். |
| (உ) | நன்கொடையாகக் கிடைத்த ரூபா 640,820 பெறுமதியான சொத்துக்கள் மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.2 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| நாளது வரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை இல்லாமையினால் ரூபா 28,538,949 கூட்டுத் தொகையான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

1.3.3 **இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1988 இன் நகர சபைகள் கட்டளைச் சட்டம் | | | | |
| (i) | 164(2) ஆம் பிரிவு | | 1968 இன் 14 ஆம் இலக்க சுற்றுலா சபை அபிவிருத்தி சட்டத்தில் சுற்றுலாச் சபையில் அங்கீகரிக்கப்பட்ட ஹோட்டல்களுக்காக அனுமதிப்பத்திரம் வழங்கும் போது ஆண்டின் பெறுவனவுகளில் ஒரு சதவீத கட்டணம் அறவிட வேண்டிய போதிலும் அனுமதிப் பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 02 சுற்றுலா ஹோட்டல்கள் அவதானிக்கப்பட்டன. | கட்டணம் அறவிட்ட வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | 170(2) ஆம் பிரிவு | | நிலுவை ஆதன வரியை அறவிடும் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்படவில்லை. | துரிதமாக நிலுவை ஆதன வரி அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | 1984 இன் 37 ஆம் இலக்க விநோத வரி திருத்தச் சட்டம் | | விநோதம் அல்லது போட்டி விளையாட்டுக்களில் இருந்து கிடைக்கின்ற வருமானத்தின் அடிப்படைகளில் விநோத வரி அறவிட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | விநோதம் அல்லது போட்டி விளையாட்டுக்களில் கிடைக்கின்ற வருமானத்தின் அடிப்படையில் சபை தீர்மானிக்கின்ற தொகையொன்று அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | 2017 நவம்பர் 17 திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி | 170,298 | களுத்துறை நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 49 அறிவித்தல் பதாதைகளில் இருந்து ஆண்டிற்குரிய கட்டணம் அறவிடப்படவில்லை. | வருமானத்தை அறவிடவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஈ) | 2008 சனவரி 25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி | | முறையாக மெய்மையாய்வு செய்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய கைத்தொழில்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | முறையாக மெய்மையாய்வு செய்யப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (உ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2016/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையில் 3.1 ஆம் பிரிவு | | 19 சபை வாகனங்கள் எரிபொருள் பரிசோதனை செய்யப்படவில்லை. | சகல வாகனங்களுக்கும் வருடாந்தம் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஊ) | 2016 நவம்பர் 09 ஆம் திகதிய LGD/13/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | | சபைக்குச் சொந்தமான கடைகளில் நீண்ட காலம் உப வாடகையாளராக செயற்படுகின்ற நபர்களுக்கு வாடகை உரித்தை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் சபைக்குச் சொந்தமாக கடைகளை வாடகைக்கு வழங்கும் போது 03 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தப்பட்டிருக்கவில்லை. | உப வாடகையாளருக்கு உரித்தைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,567,270 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,467,269 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 26,363,000 | 31,407,662 | 19,342,277 | 23,048,163 | 26,780,000 | 31,737,119 | 23,035,401 | 18,884,608 |
| (ii) | வாடகை | 13,665,000 | 11,518,852 | 10,647,589 | 1,152,468 | 11,525,000 | 10,279,760 | 10,993,352 | 835,509 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,001,000 | 375,464 | 375,464 | - | 1,003,000 | 335,326 | 335,326 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 47,792,000 | 41,090,794 | 41,090,794 | 20,000,000 | 43,380,000 | 51,799,261 | 51,799,261 | - |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

#### (அ) வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதன வரி நிலுவை ரூபா 16,035,392 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 6,131,833 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை ஆதன வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | வருடாந்த சிட்டையிடல் ரூபா 23,237,761 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 15,242,050 தொகை அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை ஆதன வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை ஆதன வரி மீதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட 1839 அலகுகளில் இருந்து ரூபா 3,365,906 தொகையும் 5 – 10 வருடங்களுக்கு இடையில் ரூபா 3,713,422 தொகையும், 3 – 5 வருடங்களுக்கு இடையில் ரூபா 1,393,807 தொகையும், 1 – 3 வருடங்களுக்கிடையில் ரூபா 5,779,253 தொகையும் காணப்பட்டன. | நிலுவை ஆதன வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

(ஆ) வினோத வரி

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் விநோத வரி மீதி ரூபா 2,849,216 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் அதில் ரூபா 2,553,886 தொகை அதாவது 90 சதவீதம் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | ஆண்டின் விநோத வரி சிட்டையிடல் ரூபா 3,747,170 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் இறுதியில் ரூபா 1,111,441 தொகை அதாவது 30 சதவீதம் அறவிடவேண்டியிருந்தது. | நிலுவை வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

(இ) வியாபார வரி

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக வியாபார வரி சிட்டையிடல் தொகை ரூபா 2,934,920 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் இறுதியில் ரூபா 1,180,900 தொகை அதாவது 40 சதவீதம் அறவிடவேண்டியிருந்தது. | நிலுவை வரியை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**2.2.3 வாடகை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வியாபார நிலுவை | | |
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வியாபார நிலைய நிலுவை வாடகை மீதி ரூபா 570,429 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் நிலுவை ரூபா 281,205 தொகை அதாவது 49 சதவீதம் அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வாகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | மீளாய்வாண்டிற்காக சிட்டையிடல் ரூபா 6,944,110 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 6,403,435 தொகை கிடைத்திருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 540,675 தொகை அதாவது 08 சதவீதம் அறவிடவேண்டியிருந்தது. | நிலுவை வாடகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | பிணை முறி வாடகை | | |
| | மீளாய்வாண்டிற்காக வாடகை சிட்டையிடல் ரூபா 178,100 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டின் இறுதியில் ரூபா 72,700 தொகை | நிலுவை வாடகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| அதாவது 41 சதவீதம் அறவிட வேண்டியிருந்தது. | வேண்டும். | |
| (இ) விருந்தினர் விடுதி வாடகை<br>மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சபையின் நிலுவை விருந்தினர் விடுதி வாடகை ரூபா 300,869 ஆக இருந்ததுடன் ஆண்டின் சிட்டையிடல் ரூபா 300,869 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டிற்காக அறவிட வேண்டிய மொத்த விருந்தினர் விடுதி வாடகையில் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 257,888 தொகை அதாவது 43 சதவீதம் அறவிடவேண்டியிருந்தது. | நிலுவை வாடகையை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையில் பிரதம செயலாளரிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 4,726,433 ஆகும். | ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள்<br>நகர சபை கட்டளைச் சட்டத்தின் 157 வது பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதி விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இரண்டு விடயங்களுக்காக மாத்திரம் உப விதி விதிக்கப்பட்டிருந்தது. | மிகுதி விடயங்கள் தொடர்பாக உப விதி விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்<br>சபை வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்த அதன் செயற்பாடுகளை மேற்பார்வை | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | செய்து முன்னேற்றத்தை அளவிட வேண்டிய போதிலும் 14 பிரதான விடயங்களின் கீழ் ரூபா 132.775 மில்லியன் கிரயத்துடன் 236 பிரதான செயற்பாடுகளை இனங்கண்டு அதன் பொறுப்புக்கள் மற்றும் அதன் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக பொறுப்பான உத்தியோகத்தர் நியமிக்கப்பட்ட போதிலும் ஆண்டின் போது அந்த செயற்பாடுகள் நிறைவேற்றலின் முன்னேற்றம் எவ்வளவு என அளவிடை செய்து செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை. | எடுக்கப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்வதற்காக செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>------------------------------------------------------------ | | |
| (i) | 2018 ஆம் ஆண்டின் நகர சபையின் கழிவுப் பொருள் முகாமைத்துவதிற்காக ரூபா 48,847,455 செலவினம் ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன் இந்த செலவினத்திற்கு மேலதிகமாக உக்காத கழிவுகளை மட்டப்படுத்தி மண் போடுவதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,926,006 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்தமாக ரூபா 53,773,461 தொகை செலவிடப்பட்டிருந்தது. | சரியான கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்றைத் தயாரித்து கிரயத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ii) | கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதியொன்று விதிக்கப்படாதிருந்ததுடன் கழிவுப் பொருட்களை அகற்றுகின்ற இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறுமதலும் மேற்கொள்ளப்படவில்லை. கழிவுப் | பொருள் முகாமைத்துவத்திற்காக உப விதி விதிக்க வேண்டியிருந்ததுடன் கழிவுப் பொருட்களைக் கொண்டு போடப்படுகின்ற இடத்திற்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | வணிக நிறுவனங்களின் கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகளுக்காக போதியலவான வளம் சபையில் காணப்படும் போது 2018 மே 08 ஆம் திகதி தீர்மான இலக்கம் | வணிக நிறுவனங்களின் கழிவுப் பொருட்களை அகற்றும் நடவடிக்கைகள் | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| 5.1.13 மூலம் உட்கார 03 டென் கழிவு பொருள் டிப்பர் வண்டியொன்றுக்கு ரூபா 2,500 தொகை தனியார் நிறுவனத்திற்கு கழிவுகளை அகற்றுவதற்காக கையளிக்கப்பட்டிருந்தது. | சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பான சபை எந்த நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சபை அறிவித்து நிலைபேறான அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

(உ) பொதுமக்கள் நலன் நோக்கங்கள் உரியவாறு நிறைவேற்றப்படாமை.

| | | |
|---|---|---|
| சபை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 நடைமுறைக்கணக்குகளின் மீதி ரூபா 20,549,917 ஆக இருந்தது. மேலும் ரூபா 78.7 மில்லியன் தொகையான நிலையான வைப்பும் காணப்பட்டது. இதன் பிரகாரம் சபையின் நிதி நிலைமை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டிற்காக சபையினால் அமுல்படுத்தப்பட்ட மூலதன செயற்திட்டங்களின் எண்ணிக்கை 19 ஆக இருந்ததுடன் அதற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 18,133,601 ஆக இருந்தது. அதன் காரணமாக அபிவிருத்தி நடவடிக்கைகள் விரிவுபடுத்தும் இயலுமை சபையிடம் காணப்பட்டது. | சபையின் நிதி நிலைமை நல்ல நிலையில் காணப்படுவதனால் மேலும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் பொதுமக்களின் நலன்களைக் கட்டியெழுப்ப வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.2 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடமும் மிகையும்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| (i) நிரந்தர பதிவியணிக்கு மேலதிகமாக அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 25/2014 ஆம் சுற்றறிக்கையின் பிரகாரம் 06 உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை அதிகரித்துக் | அங்கீகரித்த பதவியணியிணரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ii) | சபையின் 40 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 314 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 273 ஆகும். அதன் பிரகாரம் 18 பதவிகளில் 42 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டதுடன் கணக்காளர் மற்றும் செயலாளர் பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (iii) | களத்தொழிலார்களாக 57 ஊழியர்களும், சுகாரதாத் தொழிலாளர்களாக 82 ஊழியர்களும் சேர்க்கப்ட்டிருந்ததுடன் இதில் வேலைக்கள தொழிலாளர்களாக 37 ஊழியர்களும், சுகாரத் தொழிலாளர்களாக 63 ஊழியர்களும் உரிய கடமைகளின் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் போது ஏனைய கடமைகளுக்காக 39 ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | ஒழுக்காற்று நடவடிக்கைகள் | | |
| | 2018 ஆம் ஆண்டின் சபைத் தீர்மானப் புத்தகம் காணாமல் போயிருந்த போதிலும் அது தொடர்பாக விசாரணை செய்து பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் இனங்காணப்படவில்லை. | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரை விரைவாக இனங்கண்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | ஊழியர் கடன் | | |
| | சேவையை விட்டுச் சென்ற/ மரணமடைந்த 49 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 556,078 ஆக இருந்ததுடன் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஓய்வுபெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா 123,295 ஆகும். | விரைவாக நிலுவைக் கடன் மீதி அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

(ஈ) ஊழியர் பிணை

| | | |
|---|---|---|
| 1998 ஆம் ஆண்டு முதல் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 107,564 தொகையான பிணை வைப்பு வங்கியில் முதலீடு செய்து உத்தியோகத்தர்களுக்கு நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிணை வைப்பு வங்கியொன்றில் முதலீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறைத் தெற்கு தர்மாராம வீதி திரிபோகன் சர்வதேச பாடசாலைக்கு நுழையும் இடம் முதல் ஆற்று வீதி இரண்டு பக்கமும் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவு நீர் நகர சபைக்குச் சொந்தமான திறந்த வடிகாலில் விடப்பட்டமை தொடர்பாக சபை எந்த சட்ட ரீதியான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | காலாவதியான 20 சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களுக்காக புதிய சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | புதிய சுற்றாடல் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | பொருள் களஞ்சிய வீதி, புதிய கடைத் தொகுதியில் பீ 08 என்ற கடையும் நகர சபைக்கு அருகில் உள்ள 37 ஆம் இலக்க கடையும் இரண்டு பகுதிகளாகப் பிரித்து உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அனுமதியற்ற பிரித்தல்கள் மற்றும் உப வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | அனுமதியற்ற கூறுபிரித்தல் மற்றும் உப வாடகைக்கு வழங்குதல் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்ட சபைக்குச் சொந்தமான காணிக்காக 2017 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய வாடகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் வியாபார நடவடிக்கைகளுக்காக வாடகைக்கு வழங்கப்பட்ட இரண்டு நிறுவனங்களிலிருந்து 2008 மற்றும் 2011 ஆண்டுகள் முதல் மாதாந்த வாடகை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கால ரீதியில் வாடகை திருத்தப்பட்டு நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (உ) | பொருள் களஞ்சிய வீதி இலக்கம் 168, A 10 மற்றும் A 26 என்ற சபைக்குச் சொந்தமான கடைகளில் இருந்து முறையே ரூபா 75 ரூபா 50 மற்றும் ரூபா 30 என்ற குறைந்த வாடகைப் பணம் அறவிடவேண்டியிருந்தது. | கால ரீதியில் வாடகை திருத்தப்பட்டு புதிய வாடகை அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஊ) | களுத்துறை மேற்கு, முதலாவது குறுக்கு வீதியன் கடை இலக்கம் 2 மற்றும் 3 என்ற கடைகளுக்குரியதாக முறையே 1982, 1985 என்ற வருடங்களின் பின்னர் வாடகை உடன்படிக்கை புதுப்பிக்கப்படவில்லை. | வாடகை உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

## 3.4 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் போது வெட்டுமங்கட பகிஸ்தான் விளையாட்டு மைதானத்தை முழுமையாக மேவுகை செய்யும் வகையில் வலை வேளி அமைக்கப்பட்டிருந்தது. விளையாட்டரங்கின் மத்தியில் வீதியொன்றை ஏற்படுத்தி பயன்படுத்தியமையினால் அந்த நுழைவு வீதியில் இரு பக்கத்திற்காகவும் விளையாட்டு மைதானத்தின் பின் பக்கத்தில் 04 அடி உயரமும் 03 அடி அகலமும் ஆன வாயற்கதவு வலைவேளிக்கு பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. | விளையாட்டு மைதானத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2017 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் இனங்காணப்பட்ட பற்றாக்குறை, மிகை தொடர்பாக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 4,450,000 செலவில் ஸ்தாபிக்கப்பட்ட அலுவலக செயற்பாடுகளுக்கான கணனி மயப்படுத்தல் மென்பொருள் முறைமையில் ஆண்டின் இறுதியில் 03 மென்பொருள் முறைமை செயலிழந்து காணப்பட்டது. | அந்த மென்பொருள் முறைமையை விரைவாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.5.2 வாகனப் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஓட்ட நிலையில் காணப்படாத 05 வாகனங்களை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கோ அல்லது விற்றுத்தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஓட்டநிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) 03 மாதம் முதல் 09 மாதம் வயையான காலம் முதல் ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட ரூபா 1,390,000 தொகையான இரண்டு டக்டர்களை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்தவில்லை. | விரைவாக பழுதுபார்த்தலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) ரூபா 2,212,000 கிரயமான 04 டெக்டர் மற்றும் ஒரு டேலர் 01 வருடம் முதல் 05 வருடம் வரையான காலம் மற்றும் மைக்ரோ கப் வண்டி 2018 ஒக்டோபர் முதல் ஓட்டநிலையில் காணப்படாதிருந்ததுடன் அவற்றின் பழுதுகளை இனங்கண்டு பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | விரைவாக பழுதுபார்த்தலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 3.5.3 நூலகப் புதத்கங்களின் மெய்மையாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நகர சபைக்குச் சொந்தமான பிரதான நூலகத்தினதும் 03 உப நூலகங்களினதும் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெறவில்லை. | வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டின் மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட 440 புத்தகங்களின் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனையொன்று நடாத்தி நட்டம் அறவிடப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (இ) | 2016 ஆம் ஆண்டின் மெய்மையாய்வு சபை பரிந்துரையின் பிரகாரம் சிறுவர் நூலகத்தில் பெறுமதி கணிப்பிடடப்படாத 2312 புத்தகங்களை அழிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 யூன் வரையிலும் அந்தப் பணிகள் நிறைவேற்றப்படவில்லை. | மெய்மையாய்வுச் சபைத் தீர்மானம் அமுல்படுத்தப்படல் வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| களுத்துறை மேற்கில் ஸ்தாபிக்கப்பட்ட ஹோட்டலுக்காக தரச்சான்றுதழ் பெற்றுக்கொள்வதன் கீழ் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்து சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | பரிந்துரைகளுக்கு முரணாக செயற்பட்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 3.7 இனங்காணப்பட்ட நட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டுக்குருந்த சுதந்திர ஆயர்வேத மருந்தகத்தில் 2018 ஆம் ஆண்டில் ஏற்பட்ட களவினால் ரூபா 115,250 | பரிசோதனையொன்று நடாத்தி நட்டத்தை அறவிடுவதற்க | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ஆ) | 2019 சனவரி 17 இல் உள்ளவாறு ரூபா 134,400 தொகையான 08 தார் பெரல்கள் பற்றாக்குறையாக இருந்தது. | பற்றாக்குறை தொடர்பாக விசாரணை மேற்கொண்டு உரிய தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

**3.8 பெறுகை**

**3.8.1 பெறுகை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்ட போதிலும் 2018 மார்ச்ட மாதம் முதல் சபை அங்கீகாரம் வழங்கப்பட்ட ரூபா 32.46 மில்லியன் கிரயமான செயற்திட்டத்திற்காக பெறுகைத் திட்டம் நாளது வரையாக்கப்படவில்லை. | பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் . |

**3.8.2 வழங்கல் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை அறைக்கு மேசையை பெற்றுக் கொள்ளும் போது மரத்தின் தடிப்பு மி.மி 25 ஆக இருக்க வேண்டிய போதிலும் வழங்கப்பட்ட தளபாடங்களுக்குரிய மரங்களின் தடிப்பு மி.மி 22 ஆனமையால் வழங்கப்பட்ட பொருட்கள் மாதிரிகளுக்கு இணங்கவில்லை. | மாதிரிகளுக்கு இணங்க பொருட்கள் வழங்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |
| (ஆ) | தலைவர் சபை உறுப்பினர்களுக்காக கதிரைகளைக் கொள்வனவு செய்யும் போது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த வழங்குனர் தெரிவு செய்யப்படாமையினால் சபைக்கு ரூபா 240,100 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபைக்கு நலன் பெறக்கூடிய வகையில் செயற்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றோம். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அலுவலக நடவடிக்கைகளை கணனி மயப்படுத்துவதற்காக நிறுவனமொன்றைத் தெரிவு செய்யும் போது கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று பதிலாக நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனத்தைத் தெரிவு செய்யும் போது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்படாமையின் காரணமாக சபைக்கு ரூபா 1,650,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | மதிப்பீட்டு நடவடிக்கைகள் மதிப்பீட்டுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். |

### 3.8.3 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நேர் ஒப்பந்த முறையின் கீழ் ஒப்பந்தங்களைக் கையளிப்பதற்கான சங்கம் ஒன்றைத் தெரிவு செய்யும் போது உரிய தகைமைகளைக் கவனத்தில் கொள்ளாமல் ரூபா 8.12 மில்லியன் தொகையான 04 செயற்திட்டங்கள் ஒப்பந்த சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தச் சங்கத்திற்கு ஒப்பந்தங்களை கையளிக்கும் போது உரிய தகைமைகள் பரீட்சிக்கப்பட வேண்டும். | சங்கத்தின் நிதி சக்தி, இயலுமை தொடர்பான தகவல்கள் சங்கங்களின் மூலம் பெறப்பட்டு சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது |
| (ஆ) | **களுத்துறை தூவல பன்சல வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்தல்** | | |
| | களுத்துறை தூவல பன்ஸல வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் நேர் ஊழியத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2.97 மில்லியன் கிரயமான மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போதிலும் பொருள் மற்றும் ஊழியப் பகுப்பாய்வு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை. | பொருள் மற்றும் ஊழியப் பகுப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டும். | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும். |